கட்டளை இல. 17

2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நுகர்வோர் விவகார அதிகாரசபைச் சட்டம்

10 (1) (ஆ) (ii) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்பட்டுள்ள கட்டளை

2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நுவர்வோர் விவகார அதிகாரசபைச் சட்டத்தின் 10 (1) (ஆ) (ii) ஆம் பிரிவின் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தினால் நுகர்வோர் விவகார அதிகாரசபையானது, ஒரு அங்கீகரிக்கப்பட்ட அமைப்பினால் "ஹலால்" என உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்படாவிட்டால் எந்த உற்பத்தியாளரோ, விற்பனையாளரோ, விநியோக்தரோ "ஹலால்" என்ற சொற்பதத்தை அல்லது அத்தகைய அர்த்தத்தைக் கொடுக்கும் விளக்கப்படத்தை அல்லது அடையாளத்தைக் கொண்ட உணவு வகை அல்லது குளிர்பான வகையை உற்பத்தி செய்யவோ, விற்பனை செய்யவோ, விநியோகம்செய்யவோ, களஞ்சியப்படுத்தவோ அல்லது விற்பனைக்கிடவோ முடியாது என நுகர்வோர் விவகார அதிகார சபை இத்தால் கட்டளையிடுகின்றது.

இக்கட்டளை 2007 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 01 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வரும்.

நுகவர்வோர் விவகார அதிகாரசபையின் கட்டளைப்படி,

சரத் விஜேசிங்க,
தலைவர்.

கொழும்பு 2,
2007, செத்தெம்பர் 10.

10-243/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.